# ஸ்ரீ வித்யபாரதி
# மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,

சக்கராம்பாளையம், அகரம் (PO),எலச்சிப்பாளையம்
திருச்செங்கோடு (TK) நாமக்கல்(DT) 637202.
Cell :99655-31727, 99655-35967,94422-88402, 80726-68664


## மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு, மார்ச் - 2024

## *TENTATIVE ANSWER KEY (04.03.2024)*

வகுப்பு – 11 - பொதுத்தமிழ்

கால அளவு :3.00 மணி நேரம் மதிப்பெண் :90

| வ.எண் | விடை | மதிப்பெண் | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| | பகுதி - I | | |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | | |
| 1. | இ) நாவைக் காக்காதவர் | 1 | 14 |
| 2. | ஈ) வால்ட் விட்மன் | 1 | |
| 3. | அ) கடல் + அலை – உயிர் + மெய் | 1 | |
| 4. | ஆ) (1)-(ii), (2)- (iv), (3)- i (4)- (iii) | 1 | |
| 5. | ஈ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன் . | 1 | |
| 6. | இ) மார்ச் 20 | 1 | |
| 7. | ஆ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி | 1 | |
| 8. | ஈ) கூற்றும் சரி, விளக்கமும் சரி | 1 | |
| 9. | ஆ) வினை | 1 | |
| 10. | அ) பாடாண் திணை | 1 | |
| 11. | இ) மாமுன் நேர் | 1 | |
| 12. | அ) சிவகாமியின் சரிதம் | 1 | |
| 13. | ஆ) i மட்டும் சரி | 1 | |
| 14. | அ) 22 | 1 | |
| | பகுதி - II<br>பிரிவு - 1<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | 3x2=6 |
| 15. | ❖ தென்கரை நாட்டில் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக்கூட்டங்கள் தங்கிச் செல்லும். | 2 | 2 |
| 16. | ❖ வீரம்,<br>❖ மானம்,<br>❖ முனனோர் சென்ற வழியில் நடத்தல்<br>❖ நம்பிக்கைக்கு உரியவர் அருகில் இருத்தல் | 1<br>1 | 2 |
| 17. | **அகநானூறு மூன்று பிரிவுகளை உடையது.**<br>❖ களிற்றியானை நிரை<br>❖ மணிமிடை பவளம்<br>❖ நித்திலக்கோவை | 1<br>1 | 2 |
| 18. | ❖ இவ்வடி நாங்கூழ்ப்புழுவைக் குறிக்கிறது. | 2 | 2 |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு - 2<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x2=4** |
| 19. | ❖ எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.<br>❖ எனவேதான் இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.<br>❖ எழுத்துமொழி அப்படியன்று. எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது.<br>❖ முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.<br>❖ அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது. | 1<br><br>1 | 2 |
| 20. | ❖ **தஞ்சைப் பெரிய கோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் ஆகும் .**<br>❖ **இராசராசசோழனால் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் முயன்று இது கட்டிமுடிக்கப்பட்டது .**<br>❖ **' தட்சிண மேரு ' என்று இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்டது.**<br>❖ **இக்கோவில் விமானம் 216 அடி உயரம் உடையது.**<br>❖ **கருவறை விமானம் 13 தளங்களையுடையது.** | 1<br><br>1 | 2 |
| 21. | ❖ சங்ககாலத்தில் தமிழகம் பெற்றிருந்த சுதந்திரத்தினால் தமிழ், ஆட்சிமொழியாகவும் பயிற்று மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் விளங்கியது.<br>❖ மேலும், சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொது மொழியாகவும் விளங்கியது எனத் தமிழின் நிலை குறித்து இராசமாணிக்கனார் கூறுகிறார் | 1<br><br>1 | 2 |
| | பிரிவு - 3<br>**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** | | **7x2=14** |
| 22. | மொழி இறுதி எழுத்துகள் - 24<br>**அவை**:<br>❖ உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும். உயிர் தனித்தும் மெய்யோடு சேர்ந்தும் மொழிக்கு ஈற்றில் வரும்.<br>➢ அ, இ, உ, எ, ஒ. (குறில்) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ ஔ (நெடில்) - உயிர் தனித்து ஈறாயின.<br>❖ மெய்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினோரெழுத்தும் சொல்லின் இறுதியில் வரும்.<br>❖ பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக் கொள்வார். | 2 | 2 |
| 23. | **அ) ஈன்ற - ஈன் + ற் + அ**<br>ஈன் - பகுதி<br>ற் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி<br>**ஆ) முளைத்த – முளை + த் +த் + அ**<br>முளை - பகுதி<br>த் - சந்தி<br>த் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி | 1<br><br>1<br><br><br>1<br><br>1 | 2 |
| 24. | **அ) அரும்பொருள் - அருமை + பொருள்**<br>**விதி:** i) ஈறுபோதல் ii) இனமிகல்<br>**ஆ) மணிக்குலம் - மணி + குலம் - மணிக்குலம்**<br>**விதி**:இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும். | 1<br>1<br>1<br>1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 25. | அ) குயில் **கூவ,** நாய் **குரைத்தது**<br><br>ஆ) சோறு **உண்டு,** நீர் **குடித்தல்.** | 1<br><br>1 | 2 |
| 26. | **குரை** கடல் அளவு செல்வம் கொடுத்தாலும் **குறை** கூறுவர்<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 2 | 2 |
| 27. | அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை_ தீமைகளைப் புரிந்து பேசுவர்.<br>ஆ) தமிழர் ஆ**ற்றுத்** தண்ணீ**ரைத்** தேக்கி**ச்** சேமி**த்துக்** கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர். | 1<br><br>1 | 2 |
| 28. | அச்சுப்படியைத் திருத்துவதற்குப் பயன்படும் திருத்தக் குறியீடுகள் ஐவகைப்படும்.<br>❖ பொதுவானவை,<br>❖ நிறுத்தக் குறியீடுகள் தொடர்பானவை,<br>❖ இடைவெளி தர வேண்டியவை,<br>❖ இணைக்க வேண்டியவை,<br>❖ எழுத்து வடிவம் ஆகியனவாகும். | 2 | 2 |
| 29. | மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை **என்பதால்** மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் **சென்று** சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். | 2 | 2 |
| 30. | **வைகை -** சைவருக்கும் சமணருக்குமிடையே வைகை நதியில் புனல் வாதம் நிகழ்ந்தது.<br>**வை கை** – 'வை கை' என்றவுடன் ஒருவர் கைமீது ஒருவர் கை வைத்து, ஒற்றுமையுடன் இனி வாழ்வதாய் உறுதி பூண்டனர்.<br>**(அல்லது)**<br>**நஞ்சிருக்கும்** - இரு ஆடைகளையே மாற்றி மாற்றித் துவைத்து உடுத்துவதால் அந்த ஏழையின் ஆடைகள் நஞ்சிருக்கும் (நைந்திருக்கும்).<br>**நஞ்சு இருக்கும்** - நஞ்சிருக்கும் பாம்பினைக்கூட நம்பி அதனுடன் இருக்கலாம்; ஆனால், நயவஞ்சகருடன் ஒரு விநாடியும் உடனிருக்க இயலாது.<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br><br>1<br>1 | 2 |
| | **பகுதி – III**<br>**பிரிவு - 1**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x4=8** |
| 31. | **நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் கூறுவன:**<br>பொதுப்பாயிரத்தின் வரலாறு:<br>❖ நூலின் இயல்பு<br>❖ நூலைக் கூறும் ஆசிரியர் இயல்பு<br>❖ ஆசிரியர் மாணாக்கனுக்கு நூலைக் கூறும் இயல்பு (கற்பிக்கும் முறை)<br>❖ நூலைக் கேட்கும் மாணவர் இயல்பு<br>❖ நூற்பொருளைக் கேட்கும் இயல்பு (கற்கும் முறை)<br>சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம்:<br>❖ நூலாசிரியர் பெயர்<br>❖ நூல் பின்பற்றிய வழி<br>❖ நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு<br>❖ நூலின் பெயர்<br>❖ தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு.<br>❖ நூலில் குறிப்பிடப்படும் கருத்து<br>❖ நூலைக் கேட்போர் (மாணவர்)<br>❖ நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன், ஆகிய எட்டுச் செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரத்தின் இலக்கணமாகும்.<br>❖ நூல் இயற்றப்பட்ட காலம், அது அரங்கேற்றப்பட்ட அவைக்களம், அது இயற்றப்பட்டதற்கான காரணம் என்னும் இம்மூன்றையும் மேலே கூறப்பட்டுள்ள எட்டுச் செய்திகளுடன் சேர்த்துக் கூறுவோரும் உள்ளனர். | 4 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 32. | **இடம்:**<br>❖ பாரதிதாசன் இயற்றிய புரட்சிக்கவியில் இடம் பெற்றுள்ளது.<br>**பொருள்:**<br>❖ மாசில்லாத உயர்ந்த தமிழை உங்களின் உயிராகப் போற்றுங்கள்.<br>**விளக்கம்:**<br>❖ "நான் தமிழறிந்தவன் என்பதால் வேந்தன் தன் மகளுக்குக் கவிதை கற்பிக்க அழைத்தான்; நான் தமிழ்க்கவிஞன் என்பதால் அமுதவல்லியும் என்னைக் காதலித்தாள். அமுதம் என்று பாராட்டப்படும் தமிழ் எனது மரணத்துக்குக் காரணமானது என்று இச்சமுதாயம் நினைத்திடுமோ? எனது தாய்மொழிக்கு அப்படி ஒரு பழி வந்திடில் சகிப்பேனோ? மக்களே, உங்களை ஒன்று வேண்டுகின்றேன். மாசு இல்லாத உயர்ந்த தமிழை உங்களின் உயிராகப் போற்றுங்கள். இதுவே எனது வேண்டுகோளாகும்" என்று முழங்கினான். உதாரன். | 2<br>1<br>1 | 4 |
| 33. | **நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**<br>**மேற்சென்று செய்யப் படும்**- இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு<br>**சீர் - அசை -வாய்பாடு**<br>நாச்/செற்/று - நேர் + நேர் + நேர் - தேமாங்காய்<br>விக்/குள்/மேல் - நேர் + நேர் + நேர் - தேமாங்காய்<br>வா/ரா/முன் - நேர் + நேர் + நேர் - தேமாங்காய்<br>நல்/வினை - நேர் + நிரை - கூவிளம்<br>மேற்/சென்/று - நேர் + நேர் + நேர் - தேமாங்காய்<br>செய்/யப் - நேர் + நேர் - தேமா<br>படும் - நிரை - மலர்<br>இக்குறட்பாவின் ஈற்றடியின் ஈற்றுச்சீர் மலர் என்னும் வாய்பாட்டைப் பெற்று முடிந்துள்ளது. | 4 | 4 |
| 34. | ❖ பயிர் விளையும் வயலுக்குப் பயன்படக்கூடிய சிறுவாய்க்கால் செய்யும் வேலைகள் வியப்பைக் தருகின்றன.<br>❖ தங்களுக்கு உணவைக் கொடுக்கும் வயல்களுக்குப் பயன்படுவது எனப் பலராலும் எண்ணப்படுவது, இந்தச் சிறிய வாய்க்கால்.<br>❖ இது கடலினை மலையாகவும், மலையை அலைகடலாகவும் மாற்றியமைக்கின்றது.<br>❖ பருக்கைக் கற்களை நெறுநெறு என்று அரைத்து சிறு பொடியாகச் செய்து கொழிக்கிறது.<br>❖ தன் வல்லமைக்கு உட்பட்ட மண், கல், புல், புழு ஆகியவற்றுள் இன்ன பொருளைத்தான் இழுத்துச் செல்வது என்றில்லாமல், எல்லாவற்றையும் ஈர்த்துக் தனக்குள்ளே அகப்படுத்திக்கொள்கிறது;<br>❖ காலமாகிய தச்சன், கடலாகிய பெரிய நீர்ப்பள்ளத்தில் கட்டுகின்ற மலைக்கு இவை மிகவும் பொருத்தமானவை என்று ஆராய்ந்து, அவற்றையெல்லாம் உருட்டிக் கொண்டு சென்று கடலிலே இடுகிறது.<br>❖ பின்பு கதிரவனின் கதிர்ஒளியில் ஆவியாகி மீண்டும் மழையெனப் பொழிந்து பெரிய மலைகளிலுள்ள சிகரத்தை அடைகிறது.<br>❖ பின்பு, குன்றுகள் வழியே வழிந்தோடி அருவியாய் விழுந்து பூமியின் பல பாகங்களின் வழியாகவும் நுழைந்து, சுனையாகவும் குதித்தெழுந்து ஓடியது, சிறிய நீர் ஊற்றாய் பரந்து விரிந்து ஆறாய் நடந்தும், மதகு வழியே அடைபட்டும், வாய்க்கால் வழியே ஓடியும் பல பாடுகளைப்படுகிறது.<br>❖ பின்பு கடலினையும், மேகத்தினையும் அடைந்து தன் செயலை இரவு பகல் பாராது நிரந்தரம் உழைத்துக் கொண்டே இருக்கிறது. | 4 | 4 |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு - 2<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x4=8** |
| 35. | **ஆனந்தரங்கரின் வருணைனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு :**<br>❖ "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர் பெற்று எழுந்து வந்தது போலவும், நீண்ட நாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும், தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்". | 4 | 4 |
| 36. | **ஐந்து வேளாண்மை மந்திரங்கள்**<br>❖ உழப்படாத நிலம்<br>❖ இரசாயன உரம் இல்லாத உற்பத்தி<br>❖ பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப்பாதுகாப்பு<br>❖ தண்ணீர் நிறுத்தப்படாத நெல் சாகுபடி<br>❖ ஒட்டுவிதை இல்லாமல் உயர்விளைச்சல். | 4 | 4 |
| 37. | **தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து யாம் அறிந்த செய்திகள்:**<br>❖ கல்வி கற்கப் பிரிந்து செல்வது ஓதற்பிரிவு -தொல்காப்பியம்.<br>❖ கல்வியினால் பெருமிதம் தோன்றும் - தொல்காப்பியம்.<br>❖ ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான இலக்கணங்கள் - தொல்காப்பியம், நன்னூல்.<br>❖ உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்று - புறநானூறு.<br>❖ துணையாய் வருவது தூய நற்கல்வி - திருமந்திரம்.<br>❖ கல்வி அழகே அழகு - நாலடியார்.<br>❖ இளமையில் கல் - ஔவையார். | 4 | 4 |
| 38. | **கொற்கை, வஞ்சி, தொண்டி என்னும் ஊர்ப் பெயர்கள்**<br>❖ பழந்தமிழர்களின் அரசியல், பொருளியல் மற்றும் பண்பாட்டு உருவாக்கத்தின் விளைவாக உருவானவை.<br>❖ சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்குக் கொற்கை, வஞ்சி, தொண்டி ஆகிய பெயர்கள் ஆணிவேர் அடையாளங்கள் ஆகும்.<br>❖ இப்பெயர்களில் ஒன்றைக்கூட வடமொழி இலக்கியங்கள் பதிவு செய்யவில்லை.<br>❖ சங்ககாலத் தமிழ் மன்னர்களின், குறுநிலத் தலைவர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள், போர்க்களங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு வடமேற்குப் பகுதிகளில் உள்ள ஊர்ப்பெயர்கள் பொருந்திப் போகின்றன.<br>❖ கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம்(KVT COMPLEX) காட்டும் பொதுத்தன்மை மிக முக்கியமானவை. இவை கடந்த கால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்கள். | 4 | 4 |
| | பிரிவு - 3<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | **3x4=12** |
| 39. | **அ) அணி இலக்கணம்:**<br>முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர் பல முறை வருமாறு கூறுவது **சொற்பொருள் பின்வரு நிலை** அணியாகும்.<br>**சான்று:**<br>வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்<br>துணைவலியும் தூக்கிச் செயல்.<br>**சான்று விளக்கம்:**<br>செயலின் வலிமையும் தன் வலிமையும் பகைவனின் வலிமையும் துணையாளர் வலிமையும் சீர்தூக்கிச் செயல்படுக.<br>**அணிப்பொருத்தம்:**<br>இக்குறளில் "வலிமை" என்னும் பொருளில் முன்னர் வந்த "வலி "என்னும் சொல் அதே பொருளில் பின்னர் பல முறை வந்தமையால் இது சொற்பொருள் பின்வரு நிலையணியாம். | 2<br><br>1<br><br>1 | **4** |

| | | | |
|---|---|---|---|
| | **ஆ) அணிச் சுட்டல்**<br>இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்<br>பார்தாக்கப் பக்கு விடும்.- **இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி உருவக அணி ஆகும்.**<br>**அணி இலக்கணம்:**<br>உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடியின்றி உவமையினையே பொருளாகக் கூறுவது உருவக அணி எனப்படும்.<br>**குறள் விளக்கம்:**<br>வறுமைக் கடலைக் கடக்க ஒருவன் கைக்கொண்ட இரத்தலாகிய காவல் இல்லாத படகு, அதன்கண் செல்லும்போது கரத்தல் என்னும் பாறை தாக்குமாயின் பிளந்துவிடும் என்பதாகும்.<br>**அணிப் பொருத்தம்:**<br>இக்குறளில் இரத்தலைப் படகாகவும், கரத்தலைப் பாறையாகவும் உருவகப்படுத்திக் கூறியதால் இ∴து உருவக அணியாகும்<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br>1<br>1 | **4** |
| 40. | **இலக்கிய நயம் பாராட்டல்**<br>மையக்கருத்து, திரண்ட கருத்து<br>எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தம், சுவை<br>**(மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | **4** |
| 41. | **வாழ்க்கை நிகழ்வில் பழமொழி**<br>அ) சிறு துரும்பும் பல்குத்த உதவும் **(அல்லது)**<br>ஆ) வினை விதைத்தவன் வினை அறுப்பான்<br>தினை விதைத்தவன் தினை அறுப்பான்<br>பழமொழி விளக்கம்<br>வாழ்க்கை நிகழ்வில் பழமொழி (கதை)<br>அறியும் கருத்து (நீதி)<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | **4** |
| 42. | **தா – வேர்ச்சொல்**<br>வேல்விழி கயல்விழிக்குப் புத்தகம் **தந்தாள்.(வினைமுற்று)**<br>வேல்விழி **தந்த** புத்தகம் கயல்விழிக்குப் பிடித்திருந்தது. **(பெயரெச்சம்)**<br>தலைமையாசிரியர் சான்றிதழ்களைத் **தந்து** முடித்தார். **(வினையெச்சம்)**<br>தானமாகப் பொருட்களைத் **தந்தவர்** மகிழ்ந்தார். **(வினையாலணையும்பெயர்)**<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | **4** |
| 43. | **தமிழாக்கம்**<br>**1)** மின்னுவ**தெ**ல்லாம் பொன்**ன**ல்ல.<br>2) தன்கையே தனக்கு உதவி.<br>3) பழிக்குப் பழி<br>4) வருமுன் காப்பதே மேல் (சிறந்தது) | 1<br>1<br>1<br>1 | 4 |
| | **பகுதி – IV**<br>**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** | | **3x6=18** |
| 44. | *அ)*<br>❖ *உரிய கருவிகளுடன் தக்க காலம் அறிந்து செய்தால் அரிய செயல் என்று ஒன்று இல்லை .*<br>❖ *உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில், ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.*<br>❖ *உலகத்தை வெல்லக் கருதுபவர், கலங்காமல் உரிய காலத்துக்குக் காத்திருப்பர்.*<br>❖ *கிடைப்பதற்கு அரிய காலம் வாய்த்தால், அப்போதே முடிப்பதற்கு அரிய செயலைச் செய்து முடித்து விடுக.* | 6 | 6 |

| | | | |
|---|---|---|---|
| | **ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து அறியும் கருத்துகள்:**<br>**முன்னுரை:**<br>மனோன்மணீயம் தமிழன்னை பெற்ற நல் அணிகலனாகும். நாடகத் துறைக்குத் தமிழில் நூல்கள் இல்லையே என்ற குறையைத் தீர்க்க வந்த நூல் இது. சுந்தரமுனிவர் தன் அறையிலிருந்து ஆசிரமம் வரை யாரும் அறியாவண்ணம் சுரங்கம் அமைக்கும் பணியை நடராசனுக்கு அளித்திருந்தார் ஓரளவு பணி மட்டும் இருந்தது. அதுவும் இன்றிரவு முடிந்துவிடும் என்று எண்ணிக் கொண்டு காலை வேளையில் ஊரின் புறமாக நடராசன் தனித்திருந்தான். அப்போது தனக்குத்தானே பேசிக்கொள்கின்ற தனிமொழிகளின் கருத்துகளைக் காண்போம்.<br>**புல்லும் ஒரு போதிமரம்!** :<br>❖ தேன் துளிகளைத் தாங்கிய புல், தன்பால் தேனீக்களை அழைத்து, அவற்றைத் தேன் அருந்தச் செய்கிறது;<br>❖ கரு உருவாகத் தன்னிடத்துள்ள மகரந்தப்பொடியைப் பரவச்செய்து காய்களை உண்டாக்குகிறது.<br>❖ அவற்றுக்குத் துரட்டி கொடுத்து, "நீங்கள் பறவை, பசு, எருது, ஆடு ஆகியவற்றின் ஒருபுறம் சிக்கி வேறு இடங்களுக்குச் சென்று நன்றாய் வாழுங்கள்," என்று புல் கூறுவதாய் நடராசன் கூறுகிறான்.<br>❖ புல்லினது இந்த அன்பையும் பொறுமையையும் அறிவினையும் அறியும் போது, எதையும் அற்பமாய் எண்ணக்கூடாது என்னும் கருத்து வெளிப்படுகிறது.<br>❖ மேலும், இயற்கையின் அழகையும் அன்பையும் பார்த்துப் பார்த்து மகிழ வேண்டும்;<br>❖ அன்பினால் அனைத்து உயிரையும் தம் உயிராய்க் கருதி என்பும் உருகும் இன்பத்தில் மூழ்க வேண்டும் என்னும் நோக்கையும் பெறுகிறோம்.<br>**வாய்க்கால் வழங்கும் நற்கருத்துகள்!**<br>❖ வாய்க்கால் நீர், அருவியாய் வீழ்கிறது; சுனையாய்க் குதித்தெழுந்து செல்கிறது; ஊற்றாய் ஊறுகிறது; ஆறாய் நடக்கிறது; மடுவாய்க் கிடக்கிறது; வாய்க்காலை ஓடிக் கடலில் கலக்கிறது.<br>❖ இப்படி நாள்தோறும் உழைக்கின்ற வாய்க்காலின் உழைப்பும் ஊக்கமும் அன்பும் மக்களிடம் இருந்தால் அடைய இயலாத பேறு எதுவும் இராது என்னும் கருத்தினை அறிய இயல்கிறது.<br>பாடுபடு, பலனை எதிர்பாராதே!<br>**"எம்மண் ணாயினும் நன்மண் ணாக்குவை"**<br>❖ இனி, நாங்கூழ்ப்புழு மூலம் அறியும் கருத்துகளை அறிவோம். நாங்கூழ்ப்புழு எத்தகைய சத்தற்ற மண்ணையும் உழுது உழுது, அம்மண்ணையே தின்று, பின் அதனை மெழுகினும் சிறந்த சேறாக மாற்றி வெளிக் கொண்டுவருகிறது.<br>❖ உழவர் பயன் பெறுமாறு இவ்வாறு உழைத்தும், பாடுபடு, பலனைத் துறந்துவிடு! என்னும் உயரிய நோக்கத்திற்கு இணங்கப் புகழை விரும்பாதவர்போல் குழியுள் மறைந்து, அதன் வாயையும் ஒரு மண் உருண்டையால் மூடி மறைத்துக் கொள்கிறது.<br>❖ இவ்வாறு பாடுபட்டு உழைக்கும் நாங்கூழ்ப்புழுவுக்கும் துன்பம் செய்யும் எறும்புகளும் பூச்சிகளும் எத்தனையோ இருக்கின்றன.<br>❖ இந்த நாங்கூழ்ப்புழு மூலம், தன்னலம் நோக்காது உழைக்கும் பெருந்தன்மையும், புகழ் விரும்பாத பெருநோக்கும், எத்தனை இன்னல்கள் வரினும் பொறுமையோடு செயல்படும் தன்மையும் அவசியம் அனைவருக்கும் வேண்டும் என்னும் கருத்து வெளிப்படுகிறது. | 6 | 6 |

| | | | |
|---|---|---|---|
| | **முடிவுரை:**<br>எல்லா இடத்திலும் இவ்வாறு இணையிலா இன்பமும் குறைவிலா அன்பும் தங்கி இருப்பதை அறியாதவர்கள் வாழ்ந்தும் என்ன பயன்? எனக் கேட்கிறான் நடராசன். இவ்வாறு சிறுபுல்லுக்கும், புழுவிற்கும், வாய்க்காலுக்கும் பெரு உழைப்பும், முயற்சியும், குறிக்கோளும், ஒழுக்கமும், பொறுமையும் உண்டு என்பது நடராசன் தனிமொழி வாயிலாக<br>அறியலாகும் கருத்துகளாகும் | | |
| 45. | **அ) மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியும், எழுத்து மொழியும்:**<br>**முன்னுரை:**<br>கலைகளின் உச்சம் கவிதை என்பர். அக்கவிதையினை இயன்றவரை பேசுவது போல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் கூறினார் மகாகவி பாரதி. கவிதை எவ்வாறு நிகழ்கிறது; எழுத்து மொழியைக் கடந்து பேச்சுமொழி எவ்வாறு கவிதைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பதைப் பற்றிக் காண்போம்.<br>**மொழி:**<br>❖ தனது எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிப்பது மொழி. மொழி பேச்சுமொழி, எழுத்துமொழி என இருவகைப்படும்.<br>**பேச்சுமொழி:**<br>❖ பேச்சுமொழி திரவ நிலையில் நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்கிறது.<br>❖ உடம்பின் ஒரு பகுதியாக இருக்கும் தொண்டையிலிருந்து எழும் சொற்கள், குரல் ஏற்ற இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பிச்சொல்லுதல், மௌனம் ஆகியவற்றால் வடிவம் கொடுத்து வெளிப்படுகின்றன.<br>❖ எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.<br>❖ எனவேதான் இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.<br>❖ எழுத்துமொழி அப்படியன்று. எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது.<br>❖ முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.<br>❖ பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு. பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேச்சுமொழியின்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச்செய்கின்றன. இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர். இதையே நேரடி மொழி எனக் கருதுகின்றனர்.<br>❖ நேரடி மொழி எனப்படும் பேச்சு மொழிக்கு ஒரு போதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடன் இருக்கிறது. மாறிக்கொண்டே இருக்கிறது. இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா இல்லை இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் மலையாளக் கவி ஆற்றூர் ரவிவர்மா. பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல்தோல் போல் இயங்குகிறது.<br>❖ பேச்சு மொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களில் மூன்று வகையினர் உண்டு. முதல் வகையினர் | 6 | 6 |

| | | | |
|---|---|---|---|
| | வால்ட்விட்மனைப் போன்றவர்கள். கவிஞர் மல்லார்மே போன்றவர்கள் இரண்டாம் வகையினர், மூன்றாம் வகையினர் ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய பாப்லோ நெரூடா போன்றவர்கள்.<br>**எழுத்துமொழி:**<br>❖ ஒரு திரவ நிலையில்தான் விரும்பும் வகையில் தன்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது.<br>❖ எழுத்துமொழி எழுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது.<br>❖ எழுத்துமொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது.<br>❖ எழுத்து என்பது ஒரு வகையில் பார்த்தால் தனக்குத் தானே பேசிக் கொள்கிற பேச்சு. வலிமை பெற்ற மொழி:<br>❖ பேச்சுமொழியில் பழமை தட்டாது. உணர்வுகளுக்குக் குறையில்லை. எப்போதும் உயிர்ப்புடன் மாறிக்கொண்டு இருப்பதைப் பேச்சு மொழியில் உணரலாம். பேச்சுமொழியே வலிமை வாய்ந்தது.<br>❖ பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அ∴து உடம்பின் மேல்தோல் போல் இயங்கும். ஆனால் எழுத்து மொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றன.<br>**முடிவுரை:**<br>பேச்சுமொழியாயினும், எழுத்து மொழியாயினும், மொழி என்ற ஒன்று என்னுள் வந்தபின்தான் உலகம் எனது கவனிப்பிற்குரிய ஒன்றாக மாறியது. எனது உலகத்தை இழையிழையாகப் பிரித்தும், வகுத்தும், தொகுத்தும் கொடுத்தது என்பதை உணர்ந்தோம் | | |
| | **ஆ)**<br>**முன்னுரை:**<br>"நாட்குறிப்பு என்பது, அதை எழுதுபவர் யார் என்பதைப் பொறுத்தே அது பிற்காலச் சமுதாயத்திற்குப் பயனளிப்பதாய் அமையும். எழுதுபவர் சாதாரண மனிதராய் இருப்பின், பெரும்பாலும் அ∴து அவர் சந்ததியினருக்கு மட்டுமே பயனளிப்பதாய் இருக்கும். ஆனால், நாட்குறிப்பை எழுதியவர் கலைஞர், எழுத்தாளர், அரசியல்வாதி, அரசியல்வாதிகளோடு தொடர்புள்ளவர் என்னும் நிலையில் இருப்பவராயிருந்தால், அவர்கள் எழுதிய நாட்குறிப்பு சமுதாயத்திற்குப் பயனளிக்கும். காரணம், அவர்கள் தொடர்பு கொண்டிருப்போர் சமுதாய வரலாற்று நிகழ்வுகளில் பங்குகொள்பவராய் இருப்பதேயாகும்.<br>**வரலாற்றை உருவாக்கும் வல்லமை பெற்றோர் தொடர்பு! :**<br>❖ ஆனந்தரங்கர் மிகச் சாதாரண மனிதரே ஆவார். அவர் முதலில், பரங்கிப்பேட்டை நெசவுச்சாலைக்கும் சாயம் துவைக்கும் கிடங்குக்கும் தலைவர் ஆனார்.<br>❖ பின், தம் உழைப்பாலும் உண்மையே உரைக்கும் திறத்தாலும் முன்னேறி, பிரெஞ்சு ஆளுநர் துய்ப்ளே அவர்களிடம் மொழிப்பெயர்ப்பாளராகப் பணியாற்றத் தொடங்கினார்.<br>❖ அதனால் வல்லாண்மைமிக்க பிரெஞ்சு ஆட்சியாளர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றார்.<br>❖ வரலாற்றை உருவாக்கும் வல்லமை பெற்ற அவர்களால் நிகழும் நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்தார். அன்றாடம் அவற்றைத் தம் நாட்குறிப்பில் பதியத் தொடங்கினார்.<br>**அரசியல் செய்திகள்:**<br>❖ பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ், நாணய அச்சடிப்பு உரிமையைப் பெறுவதற்காகச் செலவழித்த | 6 | 6 |

| | | | |
|---|---|---|---|
| | பெருந்தொகையை ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில் குறித்துள்ளார்.<br>❖ தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயர் மீது பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்பு, புகழ்பெற்ற ஆம்பூர்ப் போர், தஞ்சைக் கோட்டைமீது நடத்திய முற்றுகை, இராபர்ட் கிளைவின் படையெடுப்பு, ஆங்கிலேயர் புதுச்சேரியினை முற்றுகை இட்டது முதலியவற்றையெல்லாம் ஆனந்தரங்கர் திறம்பட எழுதியுள்ளார்.<br>❖ 1758 ஆம் ஆண்டு இறுதியில் சென்னைக் கோட்டையை லல்லி முற்றுகை இட்டார். அவர் கோட்டையை இடித்தார்; வீடுகளைத் தரைமட்டமாக்கினார்; மதிலை இடித்து அகழியைத் தூர்த்தார். ஆயினும் அவரால் சென்னைக் கோட்டையைக் கைப்பற்ற இயலவில்லை.<br>❖ இவ்வாறு மிக உயர்ந்த பதவியில் இருப்பாரோடு நெருக்கமுற்றிருந்த ஆனந்தரங்கர், அன்றாடம் நிகழ்ந்த நிகழ்வுகளைத் தம் நாட்குறிப்பில் குறித்துக்கொண்டார்.<br>❖ இவை அன்றைய ஆனந்தரங்கருக்குச் சாதாரண செயல்களாய் இருந்திருக்கலாம். ஆனால், அவை 25 ஆண்டு காலத் தென்னிந்திய வரலாற்றினை வெளிப்படுத்தும் புதையலாகும்; அக்காலத்திய பிரெஞ்சு அரசுபற்றி அறிய உதவும் சிறந்த வரலாற்றுக் கருவூலம்; ஆவணம்; ஏன், சிறந்த இலக்கியமுமாகும்.<br>**முடிவுரை:**<br>தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்திய ஆனந்தரங்கன் 12.01.1761 ல் மறைந்தார். அந்தக்காலத்தில் நடந்த அனைத்துச் செய்திகளையும் ஒன்றுதவறாமல் நல்ல பாஷையில் எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர் என்று மகாகவி பாரதி கூறுயது முற்றிலும் உண்மையானது. | | |
| 46. | **குறிப்புச்சட்டகம்**<br>**முன்னுரை:**<br>"காட்டின் மூலவர் யானை"<br>ஜெயமோகன் நாகர்கோவிலைச் சேர்ந்தவர். இயற்கை ஆர்வலர். யானையைப் பாத்திரமாக வைத்து "ஊமைச் செந்நாய், மத்தகம்" - ஆகிய கதைகளை எழுதியுள்ளார்.<br>"யானை டாக்டர்" மூலம் நாம் அறிந்து கொள்ளும் இயற்கை உயிரினப் பாதுகாப்பு குறித்துக் கீழ்க்கண்டவாறு காண்போம்.<br>**இயற்கை:**<br>"ஈரைந்து மாதம் தாயின் மடியில்<br>வாழும் காலம் வரை இயற்கையின் மடியில்"<br>ஒரு நாட்டின் வளம் காட்டுவளத்தனைப் பொறுத்தே அமையும் என்பர். காடு செழித்தால் நாடு செழிக்கும்.<br>அடர்ந்த காடுகளில் யானை, சிங்கம், புலி, மான் முதலான விலங்குகள் வாழ்கின்றன. பல்வேறு வகையான பறவைகளும் வாழ்கின்றன. நோய் தீர்க்கும் மூலிகைகள், தேன் போன்றவற்றை நாம் காட்டிலிருந்தே பெறுகின்றோம். சந்தனமரம், தேக்கு மரம், மூங்கில் போன்ற அரிய வகை மரங்கள் விளைவதும் காட்டில்தான். அம்மரங்கள் காற்றிலுள்ள தூசை அகற்றித் தூய்மைப்படுத்துகின்றன. தட்பவெப்ப நிலையைச் சமப்படுத்துகின்றன. காட்டிலுள்ள மரங்கள்தான் மேகங்களைக் குளிர்வித்து மழையாகப் பெய்யச் செய்கின்றன.<br>இப்படிப் பல வகைகளில் நன்மைஅளிக்கும் காட்டை மனிதன் தன் சுயநலத்திற்காக அழித்துக் கொண்டிருக்கிறான்.<br>**உயிரினப்பாதுகாப்பு:**<br>"மனிதனின் முறை தவறிய மகிழ்ச்சியால்<br>அழிந்த இயற்கை உயிரினங்கள்"<br>குடியிருப்புகளைக் கட்டும் நோக்கிலும், பலவகை மரப்பொருள்களைச் செய்து பொருளீட்ட வேண்டும் என்னும் கருத்திலும், மனம் போன போக்கில் காட்டிலுள்ள மரங்களை வெட்டி வீழ்த்திக்கொண்டிருக்கிறான். ஒரு மரம் வெட்டினால் இரு | 6 | 6 |

| | | | |
|---|---|---|---|
| | மரம் வளர்ந்திட நட்டுக் காக்க வேண்டும் என்னும் பொருள் பொதிந்த வாசகத்தை எவரும் மதிப்பதில்லை.<br>சுற்றுலா செல்வதாய்க் கூறிக்கொண்டு பலர்காட்டில் நுழைந்து, மதுவைக் குடித்துவிட்டு அலட்சியமாய் அதன் குப்பியைத் தூக்கி எறிந்துவிட்டுச் செல்கின்றனர். உடைந்த அக்குப்பியின் பகுதிகள் யானையின் காலில் பதிந்து, நாளடைவில் அதன் உடற்பகுதியிலே தங்கிப் புண் ஏற்படச் செய்து அதற்குப் பெருந்துன்பம் இழைத்துவிடுகின்றன.<br>எனவே, மண்வளம் காக்கவும், மழைவளம் பெருகவும், தொழில்வளம் சிறக்கவும், உயிரினம் வாழவும், மனிதன் தன் பொறுப்பினை அறிந்து செயல்பட்டால் காடுகள் செழிப்புற்று விளங்கும்.<br>**கதை உணர்த்தும் நீதி:**<br>''இயற்கையைப் போற்றுவோம்<br>உயிரினங்களைப் பாதுகாப்போம்''<br>**முடிவுரை:**<br>**"**காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்<br>யாழ்வரை தங்கி யாங்கு**"** - கலித்தொகை 2: 26 -27<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | |
| | **ஆ) சிம்பொனித் தமிழர் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகள்:**<br>தாய் பாடும் தாலாட்டில் தொடங்கி, தமிழ்நாட்டின் அனைத்து இசை வடிவங்களையும் அசைபோட்டு வளர்ந்த தமிழகத்தின் பெருமைக்குரிய இசைமேதை சிம்பொனித் தமிழர் ஆவார். இவர் இசைஞானி என்றும் ராகதேவன் என்றும் கொண்டாடப்படுகின்ற இளையராஜா ஆவார்.<br>**இசைச் சங்கமம் :**<br>பழந்தமிழ் இசையையும் உழைக்கும் மக்களின் துள்ளல் இசையையும் கலந்து மக்கள் மனத்தை மயக்கும் வகையில் கலந்து கொடுத்தவர், இளையராஜா. பொதுமக்கள் நுகரும் திரையிசையில் கர்நாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தவர்;<br>இளையராஜா கர்நாடக இசையின் பல இராகங்களைத் திரையிசையில் அறிமுகப்படுத்தினார்.அதனால் திரைமெல்லிசை புதிய உயரங்களைத் தொட்டது.<br>**இசைக்கொடை :**<br>அன்னக்கிளி படத்தில் அறிமுகமான இளையராஜாவின் இசையோட்டம் தமிழர் வாழ்ந்த திசைகளில் எல்லாம் தென்றலாய் நுழைந்து புதிய வாசல்களைத் திறந்தது. புதுப்புது மெட்டுகள் இளையராஜாவிடமிருந்து தமிழ்ச் சமூகத்திற்குக் கொடையாகக் கிடைத்தன.<br>**நாட்டுப்புற இசை:**<br>நாட்டுப்புற இசையில் செவ்வியல் தன்மைகளோடு மேற்கத்திய இசையைக் கலந்து உலவவிட்டவர். நாட்டுப்புறப்பாடலுக்கு கர்நாடக இசைவடிவம் கொடுத்தார்.<br>**அனுபவம் இனிது :**<br>இந்தியாவில் முதன் முதலில் சிம்பொனி இசைக்கோவையை 13 நாட்களில் உருவாக்கியவர். மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை, உற்சாகம், வலி போன்ற மனித உணர்வுகளுக்கும் இசைவடிவம் கொடுக்க முடியும் என்பதை " இந்தியா 24 மணி நேரம் என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.<br>**இசைத்தொகுப்பு :**<br>மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடலுக்கு ஆரடோரியோ இசை வடிவம் தந்தார். இராஜாவின் ரமணமாலை, இளையராஜாவின் கீதாஞ்சலி எனும் தமிழ் இசைத்தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்ற பக்திப் பாடலுக்கும் இசையமைத்துள்ளார். பஞ்சமுகி இராகத்தை உருவாக்கினார். ''எப்படிப் பெயரிடுவேன்?'' ''காற்றைத் தவிர ஏதுமில்லை'' எனும் இசைத் தொகுப்புகள் சிறப்பு வாய்ந்தவை. | 6 | 6 |

**எழுதிய நூல்கள்:**

“பால்நிலாப் பாதை”, ”வெட்ட வெளிதனில் கொட்டிக் கிடக்குது” உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

**விருதுகள்:**

பத்மபூஷண் விருது, சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது, கலைமாமணி விருது, லதா மங்கேஷ்கர் விருது போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார்.

**ஆஸ்கர் தமிழர் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகள்:**

ஆஸ்கர் தமிழர் என்று புகழப்படுபவர் இசைப்புயல் என்றும், ஆசியாவின் மொசார்ட் என்றும் பாராட்டப்படும் ஏ.ஆர். இரகுமான் ஆவார்.

**புதிய எழுச்சி :**

1992 ஆம் ஆண்டில் ரோஜா திரைப்படத்தின் இசையமைப்பாளராய்த் தமது பணிகளைத் தொடங்கினார், ஏ.ஆர். இரகுமான். இவரது இசை, தமிழ்த்திரைப்பட இசையுலகில் புதிய எழுச்சி ஏற்படுத்தியது. தமது முதல் படத்திற்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற பெருமையையும் ஏ.ஆர். இரகுமான பெற்றார்.

2009 ல் சிறந்த திரைப்படப் பின்னணி இசைக்கான, சிறந்த திரையிசைப்பாடலுக்கான இரண்டு ஆஸ்கர் விருதுகள் பெற்றார்.

**இளையோர் இசையாளுமை :**

தமது துள்ளல் இசைப்பாடல்கள், புதிய இசை ஆக்கங்களால் இந்திய இளைஞர்களின் மனதைத் கொள்ளை கொண்டார், ஏ.ஆர். இரகுமான். இவர் இசையமைத்த “வந்தே மாதரம்”, “ஜனகண மன” என்னும் இசைத் தொகுதிகள் நாட்டுப்பற்றை மிளிரச் செய்வன.

**துள்ளல் இசை நாயகன் :**

தமிழ் யாப்பிலக்கணத்தின் நால்வகைப் பாக்களில் கலிப்பாவின் ஓசை துள்ளல் ஓசையாகும். கொண்டாட்ட மனநிலையின் வெளிப்பாடாக இருக்கும் இந்த துள்ளல் இசைச்சாயல் தமிழ்மக்களின் வாழ்வில் எங்கும் நிறைந்திருப்பது. அதனை நுட்பமாக உணர்ந்த ஏ.ஆர். இரகுமான தம் இசைக்கோவையில் அதனை உயிர்ப்புடன் கொண்டுவந்தார். அதன் வழியாய்த் தமிழ் இளைஞர்களை ஆடவும் பாடவும் வைத்தார்.

**கனவை இசையாக மொழிபெயர்த்தவர் :**

உலகெங்கும் பரவிய தமிழ் இளைஞர்களைத் தம் இசையால் இணைத்தார், ஏ.ஆர். இரகுமான். பல நாடுகளைச் சேர்ந்த இசை, பண்பாட்டுக் குறியீடுகளைத் தம்முடைய இசையிலே தவழவிட்டார் அவர். இணைய வழியில் உலவும் இளைஞர்களின் கனவை இசையாக மொழிபெயர்த்தார்.

**கணினி இசைமேதை :**

நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை இவற்றுடன் மேற்கத்திய உலகளாவிய இசை முறைகளையும் கலந்து, புதிய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் உலகத்தரத்தில் இசையமைத்தார் ஏ.ஆர். இரகுமான். புதிய பாடகர்கள் பலரை அறிமுகம் செய்தார். ஒரு பாடலுக்கு மெட்டை உருவாக்கும் முன் தாளத்தை உருவாக்குபவர்.

**விருதுகள்:**

பத்மபூஷண் விருது, தேசிய இசை விருது, கலைமாமணி விருது, லதா மங்கேஷ்கர் விருது போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவ்வாறு சிம்பொனித் தமிழர் இளையராஜாவும், ஆஸ்கர் தமிழர் ஏ.ஆர். இரகுமானும் தமிழிசைக்கு வளம் சேர்த்ததோடு மட்டுமல்லாமல், தமிழர்களின் இசை வரலாற்றில் மாபெரும் அடையாளங்களாய் நிலைத்து நிற்கின்றனர்.